## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, பல்கலைக்கழகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பதவிநிலைக் கல்லூரி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்விற்கான பருமனளவு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சமுத்திர பல்கலைக்கழகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின்

பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சமுத்திர பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சமுத்திர பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | போதனா வைத்தியசாலைக்காக 2017 ஆம் ஆண்டிலே கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 681.86 மில்லியன் பெறுமதியான வீட்டு உபகரணங்கள், தளபாடங்களும் பொருத்துக்களும் கீழ் கணக்கிடப்படுவதற்குப் பதிலாக ஏனைய சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டதனால் 2017 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை தேய்மான ஒதுக்கீட்டில் ரூபா 96.17 மில்லியன் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சொத்துக்களின் வகைகள் சரியாக அடையாளங் கண்டு கணக்கிடுதல் மற்றும் கணக்கீட்டுக் கொள்கையின் படி தேய்மானங்கள் கணக்கிடப்பட வேண்டும். |
| (ஆ) | பாதுகாப்பு பல்கலைக்கழத்திற்குள் நடாத்தப்பட்டு வரும் சனசமூக நிலையம், வெதுப்பகம், உணவகம், மற்றும் சிற்றுண்டிச் சாலை மூலம் மீளாய்வாண்டிற்குள் மொத்தம் ரூபா 6.47 மில்லியன் இலாபம் ஈட்டப்பட்டிருந்தாலும் அது பல்கலைக்கழகத்தின் வருமானமாக நிதிக் கூற்றில் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வருமானத்தின் பகுதியொன்று சுயநிதிசார் நிதியத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பல்கலைக்கழத்திற்குள் ஈட்டப்படும் வருமானங்கள் பல்கலைக்கழகத்தின் வருமானமாக அடையாளங் காணப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 66.82 மில்லியன் கூட்டுத் தொகையான நேரடி வைப்பு, வருமானங்களாக அடையாளங் காணப்படாமல் நிதி நிலைமை கூற்றிற்குள் நடைமுறை பொறுப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | வருமானமொன்றாக அடையாளங் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அடையாளங் காணப்படாத பல்வேறு வைப்புக்களை அடையாளங்கண்டு உரிய வருமானத்தின் கீழ் கணக்கிடப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 18.37 மில்லியன் கூட்டுத்தொகையான அட்டுறு செலவுகள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | கணக்குகள் ஒழுங்குபடுத்தப் படும்போது தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை என்பதுடன் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | காலப்பகுதிக்குரிய செலவுகளை சரியாக அடையாளங் கண்டு கணக்கிடப்பட வேண்டும். |

## 1.6. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் 2 வருடங்கள் முதல் 4 வருடங்கள் வரை அசைவற்று முன் கொண்டுவரப்பட்டிருந்த 04 வருமதிகளின் பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1.57 மில்லியனாகும். | மாணவர்களின் பதிவுகளை இரத்துச் செய்வதற்குரிய அங்கீகாரம் கிடைக்கப் பெறவில்லை யென்பதுடன் மேலும், பெற வேண்டிய பெறுமதிகள் காணப்படுவதுடன் பெற வேண்டிய பெறுமதிகளாக காட்டப்பட்டுள்ளது. | தாமதிக்காமல் அறவிட்டுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அட்டுறு செலவுகளின் கீழ் 01 வருடத்திற்கும் 03 வருடத்திற்குமிடையே ரூபா 6.86 மில்லியன் மற்றும் ஏனைய கடன் கொடுத்தோரின் கீழ் 01 வருடத்திற்கும் 05 வருடதிற்குமிடையில் ரூபா 45.08 மில்லியன் தீர்க்கப்படாமல் மீளாய்வாண்டிலே திசெம்பர் 31 வரையும் காணப்பட்டது. | இப்போது தீர்க்கப்பட்டு வருவதாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தாமதிக்காமல் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6.3 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் கட்டுநிதி தீர்க்கப்படுதல் அல்லது மீண்டும் கையளித்தல் கட்டுநிதி விநியோகிக்கப்பட்ட நிதியாண்டின் திசெம்பர் 31 இல் செலுத்தப்பட வேண்டுமெனினும் 2012 ஆம் வருடத்திலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான ரூபா 1.91 மில்லியன் கூட்டுத்தொகையான முற்பணங்கள் செலுத்துதல் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | தீர்க்கப்படாத கொள்வனவு முற்பணங்கள், சில்லறை காசு மற்றும் விழா முற்பணங்களின் உள்ளடங்கலாக மற்றும் முற்பணத்திற்கு உரிய காலப்பகுதிப்பாய்வு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்று நிருபத்திற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், ஒழுங்கு விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை**

| | சட்டங்கள், ஒழுங்குவிதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க சேர் ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்பு பயிற்சி நிறுவகச் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க மற்றும் 2007 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க திருத்தச் சட்டம் | பல்கலைக்கழக நிறுவனத்திற்காக உத்தியோகத்தர்களை உள்வாங்கிக் கொள்வதற்கான அதிகாரம் முப்படைகளின் தேவையான கெடெட் உத்தியோகத்தர்களாக இருந்தாலும் 2011 ஆம் ஆண்டு முதல் பணம் செலுத்துதல் என்ற அடிப்படையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் உள்வாங்கப் பட்டிருந்தாலும் அதற்கான அதிகாரத்தை வழங்கும்படியான சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு தேவையான மேலதிக நடவடிக்கைகள் பாதுகாப்பு அமைச்சின் ஊடாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. | பல்கலைக்கழகச் சட்ட மூலத்தை தாமதிக்காமல் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மருந்தகவியல் பட்டக் கற்கை நெறியை மேற்கொள்வதற்காக ஆட்சேர்க்கப்படும் மாணவர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்படும் ஒப்பந்தத்தின் 07(ஏ) பிரிவு | பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட பின்னர் 05 வருடங்களுக்கு பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலைக்கு சேவையை வழங்குவதாகவும் முடியாவிட்டால் பிணைமுறி பெறுமதியாக ரூபா 1.05 மில்லியன் தொகை பணம் செலுத்துவதாகவும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தாலும் கற்கை நெறியை பூரணப்படுத்திக் | உரிய மாணவர்களுக்கு சட்ட நடவடிக்கையாக ஆரம்பக் கட்டமாக மாணவர்களுக்கு மற்றும் அவர்களின் பிணையாளர் களுக்கு உரிய பிணைமுறியை செலுத்துவதற்கு அறிவிக்கும் கடிதங்களை அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. | ஒப்பந்தத்தின் பிரகாரம் உரிய நபர்களுக்கு அறிவிக்கப்பட்டு அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அதற்குப் பதிலளிக்காதவர்கள் சம்பந்தமாக பொருத்தமான சட்ட நடவடிக்கைகளை தாமதிக்காமல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொண்ட 20 மாணவர்கள் சேவையை பெற்றுக் கொடுக்காமல் சென்றிருந்தனர். இருப்பினும், ஒப்பந்தத்தின் பிரகாரம் ரூபா 21.50 மில்லியனை அறவிடுவதற்கு இதுவரை நடவடிக்கை மேற்கொண்டிருக்க வில்லை. | | |
| (இ) | பல்கலைக்கழகம் மற்றும் அங்கு கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற வெளிநாட்டு மாணவர்களுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒப்பந்தத்தில் 3(ஜி) பிரிவு | மாணவர்களின் உணவு மற்றும் தங்குமிட வசதிகளுக்காக கொடுப்பனவை மேற்கொள்ளல் அனைத்து மாதங்களினதும் இறுதியில் இடம்பெற வேண்டுமென குறிப்பிடப் பட்டிருந்தாலும் கல்விக் குழு இலக்கம் 30 இல் இருந்து 36 வரையான 76 மாணவர்கள் 2014 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 7.25 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் உரிய பெறுமதியை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தத்தின் பிரகாரம் உரிய நபர்களுக்கு அறிவிக்கப்பட்டு அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அதற்குப் பதிலளிக்காதவர்கள் சம்பந்தமாக பொருத்தமான சட்ட நடவடிக்கைகளை தாமதிக்காமல் மேற்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்குரிய நிதி பெறுபேறுகள் ரூபா 203.71 மில்லியன் பற்றாக்குறை ஒன்றாக அமைந்ததுடன் அதை நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறையான ரூபா 2,079.81 மில்லியனாகும். அதன்படி நிதிப்பெறுபேறுகளில் ரூபா 1,876.10 மில்லியனில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரசின் நன்கொடைகள் கூடியிருத்தல் பிரதான காரணமாக இருந்தது.

**2.2 விகித பகுப்பாய்வு**

------------------------------

**(அ) ஈடுபடுத்திய மூலதனத்தின் மீதான பெறுபேறு**

2018 ஆம் ஆண்டிற்காக ஈடுபடுத்திய மூலதனத்தின் மீதான பெறுபேறு நூற்றுக்கு மறை 4.20 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிலே அது நூற்றுக்கு மறை 0.43 ஆக காணப்பட்டது.

**(ஆ) நடமாடும் விகிதம்**

2018 ஆம் ஆண்டிலே நடைமுறைச் சொத்துக்களுக்கான நடைமுறைப் பொறுப்பு விகிதம் 1.9:1 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிலே 2.6:1 ஆகும்.

**(இ) கடன் பங்கு விகிதம்**

2018 ஆம் ஆண்டிலே பேரளவு மூலதனத்திற்கான கடன் மூலதனத்தின் விகிதம் 3.5:1 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிலே அது 3.7:1 ஆக காணப்பட்டது. அதன்படி நிறுவனங்கள் சம்பந்தமாக கூடிய கடன் பங்கு நிலைமையொன்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

-------------------------------------

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

-------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை கொள்வனவு செய்யப்பட்ட வைத்திய உபகரணங்களின் பெறுமதி முறையே ரூபா 13.25 மில்லியன், ஐ.அ.டொலர் 58,120 பிரித்தானிய பவுன் 9,456 மற்றும் யூரோ 4,212 ஆன 70 வகைகளுக்குரிய 1,386 அலகுகள் விநியோகிக்கப்படாமல் 2020 யூலை 03 ஆந் திகதியிலும் மருத்துவமனையில் வைத்திய உபகரணங்கள் களஞ்சியத்திற்குள் காணப்படுகின்றது. அதில் 16 உருப்படிகளுக்குரிய 159 அலகுகள் மற்றும் ரூபா 8.90 மில்லியன் பெறுமதியான வைத்திய உபகரணங்களின் உத்தரவாத காலம் கடந்திருந்தது. | எதிர்காலத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ள மருத்துவமனை படுக்கைத் தொகுதி / அலகுகளுக்கு விநியோகிப்பதற்கு வைத்திருத்தல் மற்றும் மருத்து மனையின் அவசிய தேவைகளுக்கு பெற்றுக் கொள்வதற்காக வைத்திருத்தல் ஆகிய காரணங்களினால் களஞ்சியத்திற்குள் வைக்கப் பட்டிருந்தது. | மருத்து மனைக்குத் தேவையான பதவியணியினர்களை துரிதமாக ஆட்சேர்ப்புக் குள்ளாக்க திட்டமிடப்பட்டுள்ள மருத்துவமனை படுக்கைத் தொர்குதி மற்றும் அலகுகளை தாமதமின்றி ஆரம்பித்து அதற்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ள உபகரணங்களை பாவனைக் குட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தெற்கு மண்டபம் மற்றும் பல்கலைக்கழக போதனா வைத்தியசாலையின் கீழ் காணி அபிவிருத்திக்காக ரூபா 1,245.69 மில்லியன் கூட்டுத்தொகை | உரிமை மாற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகள் இடம்பெற்றுக் | காணிகளின் உரிமைத் தன்மையை பெற்றுக் கொள்வதற்கு துரிதமாக நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| மற்றும் தெற்கு மண்டபத்தில் விடுதியை நிர்மாணிப்பதற்காக ரூபா 399.20 மில்லியன் செலவிடப்பட்டிருந்தாலும் அதற்குரிய காணிகளின் சட்டபூர்வமான உரிமையை பெற்றிருக்கவில்லை. | கொண்டிருப்பதாக குறிப்பிடப் பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் 177.329 மற்றும் ரூபா 3,165,821 மில்லியனான கடன் தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து பெற்றுக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த வைத்தியசாலை 2017 மே மாதத்திலே உத்தியோகபூர்வமாக திறக்கப்பட்டு வைத்தியசாலையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2017 திசெம்பர் மாதத்திலே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பல்கலைக்கழக போதனா வைத்தியசாலையினுள் நிறுவப்பட்ட 05 அலகுகள் மற்றும் ஐந்தாவது மாடியின் வைத்தியர் படுக்கைத் தொகுதி (வார்ட்) 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரைக்குமே ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | போதியளவு பதவியணியின் மற்றும் வைத்திய உபகரணங்கள் இல்லாததன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. என்பதாகவும் தேவையான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டு செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான மனித வளங்கள் மற்றும் தேவையான பௌதீக உபகரணங்களைப் பெற்று செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படும் வெளிநாட்டு மாணவர்களின் அளவு 44 இலிருந்து 29 இடையிலான வீச்சில் உள்ளதுடன் வெளிநாட்டு மாணவர்களை உள்வாங்குவதில் குறைந்த போக்கொன்று காணப்பட்டது. | வெளிநாட்டு தகைமைகளின் கல்வித் தகைமைகள் பரிசீலனை மேற்கொள் வதற்காக முறைமையொன்று முகாமைத்துவ சபையினால் (569:26) அங்கீகரிக்கப் பட்டுள்ளது. | வெளிநாட்டு மாணவர்கள் உள்வாங்கப்படா மைக்கு காரணங்களை தேடிப்பார்த்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | போதனா வைத்தியசாலையினுள் அமுல்படுத்தப்பட்டிருந்த 16 சிகிச்சையகங்களில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி 2019 ஆம் | வைத்தியர் களினதும் கனிஷ்ட பதவியணியினர் களினதும் வெற்றிடங்கள் | காணப்படுகின்ற வளங்களின் உச்ச பயன்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டிற்காக சிகிச்சையகத்தில் சிகிச்சை பெற முடியுமான நோயாளர்களின் அளவு 111,800 ஆக இருப்பினும் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ள அளவு 65,203 ஆக இருப்பதால் காணப்படுகின்ற வளதிறனில் நூற்றுக்கு 42 உபயோகிக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கு காரணமாகும். | மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 ஆம் அண்டின் வதிவிட சிகிச்சைக்காக காணப்பட்ட 359 கட்டில்களில், கட்டிலின் திறனில் நூற்றுக்கு 27 அளவான கீழ் தொகையொன்றே பயன்பாட்டில் காணப்பட்டது. | 2019 ஆம் ஆண்டிலே 09 ஆம் இலக்க படுக்கைத் தொகுதி (வார்ட்) திறக்கப்படாமை வைத்தியர்கள் மற்றும் பதவியணியினரின் வெற்றிடங்கள் காரணமாக மற்றும் அனைத்து வைத்திய உபகரணங்களும் நிருவப்படாமை காரணமாக செயல் நடவடிக்கைகளின் குறைந்த மட்டத்திற்கு காரணமாயிருந்தது. | வைத்திய மற்றும் ஏனைய பதவியணியினர்களை ஆட்சேர்ப்புக்கு உட்படுத்தி தேவையான வைத்திய உபகரணங்களை துரிதமாக ஸ்தாபித்து வைத்திய சாலையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப் பட வேண்டும். |
| (உ) | 2019 பெப்ரவரி 12 ஆந் திகதிய 04/2019 ஆம் இலக்கமுடைய பல்கலைக்கழக ஏற்பாட்டு ஆணைக்குழுவின் சுற்றுநிருப முறைமைக்கமைய மருத்துவபீடம், பொறியியல் பீடம், சட்ட பீடம், முகாமைத்துவ பீடம், நிர்மாணிக்கப்பட்ட சூழலும் அவகாச பீடமும் மற்றும் கணனி பீடத்திற்காக விரிவுரையாளர் ஒருவருக்கு இருக்க வேண்டிய மாணவர்களின் அளவை விஞ்சி 14, 10, 21, 04 மற்றும் 14 ஆக உண்மையான மாணவர்களின் எண்ணிக்கை மேல் தொகையொன்று காணப்பட்டது. | பாடநெறிக்காக உள்ள விரிவுரையாளர் களின் எண்ணிக்கை மற்றும் மாணவர்களின் அளவு தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. | பாடநெறியின் தரம் உயர்வடையக்கூடிய வகையில் பொருத்தமானதாக ஆசிரிய மாணவர்களுக் கிடையிலான விகிதத்தை பேணிச் செல்வதற்கு முடியுமான அனைத்திலும் செயற்படுத்த வேண்டும். |

## 3.3 செயற்திட்ட மூலதன வேலைகளின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலே திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமை கூற்றிலே செய்து கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 250.31 மில்லியன் கூட்டுத்தொகைக்குரிய பல்கலைக்கழக மருத்துவபீட கட்டிடம் மற்றும் திருமணமான உத்தியோகத்தர்களுக்கான வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் முறையே 2014 மற்றும் 2015 ஆம் வருடங்களிலே ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிர்மாணப் பணிகளை முடிப்பதற்கு தவறியிருந்தது. | 2020 ஆம் ஆண்டிலே சுய நிதிசார், நிதியத்தின் கீழ் வேலைகள் ஆரம்பிக்கப் படுமென குறிப்பிடப் பட்டிருந்தது. | செயற்திட்டத்தை திட்டமிடப்பட்ட திகதியில் முடிப்பதற்கு முகாமைத்துவத்தின் அவதானம் ஈடுபடுத்தப்பட வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பல்கலைக்கழகத்திற்குரிய 76 பதவி நிலைகளுக்காக இருக்க வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 903 ஆக இருப்பினும் உள்ளவாறான பதவியணியினராக 754 ஆக இருப்பதனால் 149 வெற்றிடமாக உள்ளது. பல்கலைக்கழகத்திற்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள தெற்காசிய வைத்தியர்கள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரான 149 ஆக இருப்பினும் வெற்றிடங்கள் 116 ஆகும். | தகைமை களுடனான விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் குறைவடைந்திருத்தல், தற்காலிகமாக ஆட்சேர்க்கப் படுவர்கள் விலகிச் செல்லல், எதிர்பார்க்கப் படுகின்ற குறைந்தளவிலான விண்ணப்பங்கள் போதுமான அளவு கிடைக்கப் பெறாமை வெற்றிடத்திற்கான காரணங்களாக இருப்பதுடன் தேவையான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன | பதவியணியினரின் தேவைகளை சரியாக மீளாய்வுக்குட் படுத்துதலும் மற்றும் தேவையான ஆட்சேர்ப்புக்களை துரிதமாக மேற்கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) தெற்கு மண்டபத்தின் கல்விசார் பதவியணியினரின் 12 பதவி நிலைகளுக்காக | வெற்றிடங்கள் பூரணப்படுத்து வதற்காக 2020 ஆம் | பதவியணியினரின் தேவையை காலத்திற்கேற்ற |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 154 ஆக இருக்க வேண்டியிருப்பினும் உள்ளவாறான பதவியணியினராக 56 பேர் மாத்திரமே காணப்படுகின்றனர் 98 வெற்றிடமாகவுள்ளது. பேராசிரியர், ஆலோசகர் தரம் I, கணனி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கட்டமைப்பு பகுப்பாய்வாளர், மற்றும் வலையமைப்பு கட்டுப்பாட்டாளர் ஆகிய பதவி நிலைகளின் கீழ் காணப்பட வேண்டியஅ ங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு எவரும் ஆட்சேர்க்கப்பட்டிருக்கவில்லை அத்தோடு கல்விசாரா பதவியணியினரில் 29 பதவி நிலைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 376 ஆக இருக்க வேண்டியதுடன் உள்ளபடியான பதவியணியினர் 100 ஆக இருப்பதுடன் 276 வெற்றிடமாகவுள்ளது. | ஆண்டிலே விளம்பரப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | வகையில் மீளாய்வுக் குட்படுத்தி தேவையான பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (இ) | வைத்தியசாலையின் வைத்திய பதவியணியினருக்காக 58 பதவி நிலைகளுக்காக காணப்பட வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1,375 ஆக இருக்க வேண்டியிருப்பினும் 19 பதவி நிலைகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டுள்ள பதவியணியினர் 427 ஆக மாத்திரம் இருப்பதுடன் நிருவாக பதவியணியினரின் 77 பதவி நிலைகளுக்காக இருக்க வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 501 இல் 06 பதவி நிலைக்காக ஒப்பந்த அடிப்படையில் 32 மாத்திரமே ஆட்சேர்க்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப் பட்டுள்ள ஆட்சேர்ப்பு முறைமை அங்கீகாரத்தின் பிற்பாடு உரிய வைத்தியர்கள் பதவியணியினர் களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுமென குறிப்பிடப் பட்டிருந்தது. | பதவியணியினரின் தேவையை காலத்திற்கேற்ற வகையில் மீளாய்வுக் குட்படுத்தி தேவையான பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது மருத்துவமனை பதவியணியினர் 08 பதவி நிலைகளுக்காக மட்டும் ஆட்சேர்ப்பு முறைமை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | தற்போது பதவியணியினர் 38 பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்பு முறைமை தயாரிக்கப்பட்டு பாதுகாப்பு அமைச்சின் ஊடாக முகாமைத்துவ திணைக்களத்திற்கு | தாமதிக்காமல் பதவிகளுக்கான தேவையான ஆட்சேர்ப்பு முறைமைகளை ஒழுங்குபடுத்தி உரிய நிறுவனத்துடன் சுமுகமான |

| | | |
|---|---|---|
| | சமர்ப்பிக்கப்படட 08 அங்கீகரிக்கிக்கபடுள்ள துடன், மேலும் 10 பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்பு முறைமைய ஒழுங்கு படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன | தொடர்புகளை ஏற்படுத்தி அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கு நியமிக்கப்பட்டுள்ள கணக்காய்வு உறுப்பினர்கள் 4 பேர் என்பதுடன் பிற்காலத்தில் பல்கலைக்கழக காரியங்கள் விஸ்தரிக்கப்பட்டாலும் அதற்கு ஏற்ற வகையில் உள்ளக கணக்காய்வுப் பிரிவு விஸ்தரிக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | மேலதிக உறுப்பினர்களை பெற்றுத் தருமாறு கேட்கப் பட்டுள்ளது. | தேவையின்படி பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குள் 06 செலவு விடயங்களில் பாதிடப்பட்ட செலவு மற்றும் உள்ளவாறான செலவுகளுக்கிடையே நூற்றுக்கு 15 இலிருந்து நூற்றுக்கு 246 வரையான வீச்சில் காணப்பட்ட வேறுபாடு காணரமாக பாதீட்டு ஆவணத்தை வினைத்திறனான கட்டுப்பாட்டு காரணி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 பாதீடு தயாரித்தல் திறைசேரியினால் வழங்கப்பட்ட பணத்தை மாத்திரம் வைத்து மேற்கெள்ளப் பட்டுள்ளதுடன், உள்ளவாறான செலவுகளை செலவிடும் போது சுய நிதிசார் நிதியத்தினால் மேற்கொள்ளப்படும் செலவுகள் உள்ளடக்கப் பட்டுள்ளது. | காலத்திற்குரிய மூலகங்களை அடையாளங் கண்டு சரியாக அவதானத்தை மேற்கொண்டு பாதீட்டு ஆவணங்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். |